முருகப்பெருமான் துணை

**மகான் மூர்த்தி நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.01.2022, புதன்கிழமை

1. வளம்தரும் ஞான குருவே
வல்லமை தரும் சித்த குருவே
பலம் கூட்டி ஞான உலகம் படைக்க
பரமானந்த வடிவாய் வந்த குருவே
2. குருவே ஆறுமுக அரங்கமகானே
குவலயத்தில் உன் பெருமைகூறி
பெருமைபட துல்லிய ஆசி
பிலவ ஆண்டு சிலைதிங்கள் தன்னில்
3. தன்னிலே எழுநான்கு திகதி புந்திவாரம்
(பிலவ வருடம் மார்கழி மாதம் 28ம் நாள், 12.01.2022 புதன்கிழமை)
தவராசன் கேட்க அருளுவேன் மூர்த்தி நாயனாரும்
மண்ணுலகம் ஞான பலம்பெற
மாதவ வழிகள்தனை காட்டும்
4. காட்டும் ஞானத்திருவடி பற்றி
கலியுகமக்கள் தொடர்ந்துவர
வாட்டம் விலகி அமைதியும்
வறுமையில்லா வளமும் காண்பர்
5. காண்கவே தருமபலம் கண்டு
கணக்காய் மக்கள் உணர்ந்துவர
உண்மைபட தருமபலம் கூட்டி
உயர்வான சேவை ஆற்றிவர
6. வருகவே எங்கும் தருமவேலி
வையகம் தனை காக்கும் சக்தியாக
ஆறுமுக அரங்கன் தயவுகிட்டி
அகிலமே அமைதி பாதுகாப்பு பெருகும்
7. பெருகவே கலியுகம் தன்னில்
பிரச்சினை பேரிடர் இல்லா
பெருமைமிக்க பாதுகாப்பு மிக்க
பேருலகமே அமைதி காண்கும்
8. காண்கவே ஞானிகள் பூசை
கலியுகமக்கள் செய்துவர
உண்மை ஞான ஆன்மீக
உயர் பூமியாக மாற்றம்பெறும்
9. மாற்றம் தரும் மாதவசியான
மகான் அரங்கன் திருவடிதனை
ஆற்றல்பட உணர்ந்து தெளிந்து
அகிலத்தார் வணங்கி வர

10. வருகவே ஞான பூமியாக இனிதே
வந்தடையும் மாற்றம் ஏற்றம்
குருவே என வணங்கிவர
குவலயம் ஏற்றம் காணும்

11. காணவே அரங்க ஞானியை
கட்டாயம் கண்டுத் தொடர
ஞானவான்களாக மக்கள் மாறி
ஞான ஆட்சி புரியக் கூடும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–